வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 14.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- உத்தரபிரதேஷ் மாநிலம் ஜேவர் விமான நிலையம் அருகே, செமி கண்டக்டர் உற்பத்தி ஆலை ஒன்றை நிறுவும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக, நீதிபதி பூஷன் ராமகிருஷ்ண கவாய், இன்று பதவி ஏற்றுக் கொண்டார்.
- 5ஜி தொலைத் தொடர்பு வசதியின் பயன்பாட்டை மிக வேகமாக அமலுக்கு கொண்டு வந்த நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர பெம்மசானி கூறியுள்ளார்.
- புதுச்சேரி கிராமப் பகுதிகளில், அரசுக் கலை - அறிவியல் கல்லூரிகளை தொடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, முதலமைச்சர் திரு.ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

------------------------------

***மத்திய அமைச்சரவை 1 (8)***

உத்தரபிரதேஷ் மாநிலம் ஜேவர் விமான நிலையம் அருகே, செமி கண்டக்டர் உற்பத்தி ஆலை ஒன்றை நிறுவும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இண்டியா செமி கண்டக்டர் இயக்கத்தின் கீழ், HCL மற்றும் Foxconn நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டுத் தொழில் முயற்சியாக, இந்த செமி கண்டக்டர் ஆலை அமைக்கப்படும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*மத்திய அமைச்சரவை* 2 (14)

(வாய்ஸ்)

ஜேவர் செமி கண்டக்டர் உற்பத்தி ஆலை, மாதம் 36 மில்லியன் செமி கண்டக்டர் சில்லுகளையும், செமி கண்டக்டர் உற்பத்திக்கு தேவையான, 20 ஆயிரம் சிலிக்கான் தகடுகளையும் தயாரிக்கும் திறன் கொண்டதாக, வடிவமைக்கப்பட உள்ளது. மொத்தம் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கக் கூடியதாக இந்த ஆலை அமையும் என்றும் மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். இந்தியாவில் ஏற்கனவே, 5 செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகளை அமைக்கும் பணிகள், பல்வேறு கட்டுமான நிலைகளில் இருப்பதாகவும், புதிதாக உத்தேசிக்கப் பட்டுள்ள 6ஆவது ஆலை, செமி கண்டக்டர் துறையில் மேம்படும் பாதையில், இந்தியாவை மேலும் முன்னெடுத்துச் செல்லும் என்றும், அமைச்சர் கூறினார். இந்தியாவில், புதிய தயாரிப்புகளுக்கான நவீன தொழில் நுட்பங்களை உலகத் தரத்தில் உருவாக்கும் முயற்சிகளில், 270 உயர் கல்வி நிறுவனங்களும், 70 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளதாக, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

------------------------------

*சந்திப்பு* (15)

முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சவுகான் இன்று புதுடெல்லியில், ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, விமானப் படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி சிங், கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி ஆகியோருடன், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, அவரது மாளிகையில் சந்தித்து, ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினார். குறிப்பிடத் தகுந்த வெற்றியுடன் தீவிரவாதத்திற்கு பதிலடி கொடுப்பதில், இந்திய பாதுகாப்புப் படையினரின் பங்களிப்பையும், இதில் படையினர் காட்டிய துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வையும் பாராட்டி, குடியரசுத் தலைவர், சமூக ஊடகத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். முப்படைகளுக்கு

இடையிலான திறம்பட்ட ஒருங்கிணைப்பு, மற்றும், நவீன செயல்பாட்டு திட்டங்கள் மூலம், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது குறித்து, முன்னதாக முப்படைத் தலைவர்களும், முப்படைகளின் தலைமைத் தளபதியும், உயர்நிலை அகப் பார்வைகளை தங்களுக்கு இடையில் பகிர்ந்து கொண்டனர்.

------------------------------

<u>*இந்தியா தடை* (5)</u>

இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானின் பொய்ப் பிரச்சாரங்களை பரப்பும் முயற்சியில் ஈடுபட்டு வந்த சில எக்ஸ் சமூக ஊடகக் கணக்குகளை, இந்தியா தடை செய்துள்ளது. சீனாவின் குளோபல் டைம்ஸ் நாளேடு, ஜிங்குவா செய்தி ஏஜென்சி, மற்றும், துருக்கி நாட்டின் TRT World ஒலிபரப்புக் கழகத்தின் எக்ஸ் ஊடகக் கணக்குகளும் இதில் அடங்கும்.

------------------------------

<u>*தலைமை நீதிபதி* (10)</u>

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக, நீதிபதி பூஷன் ராமகிருஷ்ண கவாய், இன்று பதவி ஏற்றுக் கொண்டார். புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், இன்று காலை நடைபெற்ற விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, திரு. கவாய்-க்கு, பதவி பிரமாணம் செய்து வைத்தார். தலைமை நீதிபதி பதவியில் இருந்து நேற்று ஓய்வு பெற்ற நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா-விற்கு பதிலாக, நாட்டின் 52ஆவது தலைமை நீதிபதியாக, நீதிபதி திரு. கவாய், பதவி ஏற்றுள்ளார். பதவியேற்பு விழாவில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மற்றும், பல்வேறு மத்திய அமைச்சர்களும், உச்சநீதிமன்ற நீதிபதிகளும் கலந்து கொண்டனர்.

------------------------------

*இன்டர்ன்ஷிப் (18)*

தேசிய மனித உரிமைகள் ஆணையம், பல்கலைக்கழக மாணவர்களுக்கான, 2 வார ஆன் லைன் இன்டர்ன்ஷிப் பயிற்சித் திட்டத்தை, இன்று தொடக்கி உள்ளது. இத்திட்டத்திற்கு, மொத்தம் ஆயிரத்து 795 விண்ணப்பங்கள் பெறப் பட்டதில், 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 80 மாணாக்கர்கள், பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். நாட்டில், மனித உரிமை நிலவரங்களை பராமரித்து பாதுகாப்பது குறித்து, மாணவர்களுக்கு விரிவான புரிதல் வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. திட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் திரு. பரத் லால் பேசுகையில், கருணை, நீதி, இரக்கம் போன்ற, இந்தியப் பாரம்பரியத்தின் பழமையான மரபுகளை தாங்கிப் பிடிப்பதே இளைஞர்கள்தான் என்றும், நீதி, சமத்துவம், மற்றும், கண்ணியத்தின் தூதுவர்களாக மாணவர்கள் செயல்பட வேண்டும் என்றும் கூறினார். மனித உரிமைகளை பராமரித்து, அனைத்து மக்களின் கண்ணியத்தை பாதுகாப்பதற்கான இந்தியாவின் அரசியல் சாசன கட்டமைப்பு குறித்து, நன்கு புரிந்து கொள்ள, மனித உரிமைகள் ஆணையத்தின் இன்டர்ன்ஷிப் வாய்ப்பை, மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

------------------------------

*தொலைத் தொடர்பு 1* (6)

உலக அளவில், 5ஜி தொலைத் தொடர்பு வசதியின் பயன்பாட்டை மிக வேகமாக அமலுக்கு கொண்டு வந்த நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக, மத்திய தகவல் தொடர்புத் துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர பெம்மசானி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பாரத்-6ஜி சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தொலைத் தொடர்பு 2 (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா, 5ஜி புரட்சி ஒன்றை சந்தித்து இருப்பதாகவும், அடுத்த தலைமுறை 6ஜி தொலைத் தொடர்பு வசதிகளை அமல்படுத்துவதிலும், இந்தியா உலகத் தலைமை ஏற்கும் என்றும், மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர பெம்மசானி கூறினார். 6ஜி தொலைத் தொடர்பு வாய்ப்புகளை, வெறும் தொழில்நுட்ப மாற்றமாக அன்றி, புதிய போக்குகளை நிர்ணயிப்பதற்கான தேசிய இயக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். 6ஜி தொலைத் தொடர்பு வசதிகளின் அமலாக்கத்தில், முன்னோடி நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, பாரத் 6ஜி மாநாட்டில், உலக அளவிலான தொழில்நுட்ப நிபுணர்கள், மற்றும் ஆராய்ச்சியாளர்களும், கொள்கை வகுப்பாளர்களும் பங்கேற்றுள்ளனர்.

------------------------------

ரங்கசாமி (13)

புதுச்சேரி கிராமப் பகுதிகளில், அரசுக் கலை - அறிவியல் கல்லூரிகளை தொடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, முதலமைச்சர் திரு.ரங்கசாமி தெரிவித்துள்ளார். இன்று இந்திராகாந்தி அரசு கலை-அறிவியல் கல்லூரியின் ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர், கலை-அறிவியல் பயின்றவர்கள்தான், உயர்நிலை நிர்வாகப் பதவிகளுக்கு உயர்வதால், கலை-அறிவியல் கல்லூரி மாணவர்கள், தாழ்வு மனப்பான்மை கொள்ளத் தேவையில்லை என்றார். புதுச்சேரி இந்திரா காந்தி அரசு கலை-அறிவியல் கல்லூரி, தேசிய அளவிலான தர வரிசைப் பட்டியலில், 150 முதல், 200 வரையிலான பிரிவில், இடம்பெற்று இருப்பது, பெருமைக்கு உரியது என்றும் அவர் கூறினார். விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.கே.டி ஆறுமுகம், திரு. கே.எஸ்.பி ரமேஷ், உயர் கல்வித் துறைச் செயலர் திரு. அமன் ஷர்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------------

<u>கூத்தாண்டவர்</u> (8)

புதுச்சேரியில் இன்று, பிள்ளையார்குப்பத்தில் நடைபெற்ற கூத்தாண்டவர் கோவில் தேரோட்டத்தை, அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், வடம்பிடித்து தொடக்கி வைத்தார். கூத்தாண்டவர் கோவில் சித்திரை விழாவின் ஒருபகுதியாக, நேற்று நடைபெற்ற திருக்கல்யாண வைபவம் மற்றும், திரு வீதியுலாவில், ஏராளமான திருநங்கைகள் உட்பட, பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் இன்று மாலை, அழுகள நிகழ்ச்சியும், வரும் 29ஆம் தேதி, படுகளம் எழுப்புதல் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

-------------------------------

<u>வீட்டு வரி</u> (6)

உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட, அனைத்து வார்டுகளிலும், கடந்த நிதியாண்டிற்கான வீட்டு வரி மற்றும் சொத்து வரியை இதுவரை செலுத்தாதவர்களுக்கு, வரும் 23ஆம் தேதி வரை, வட்டி இல்லாமல் வரி செலுத்த கால நீட்டிப்பு வழங்கப் பட்டுள்ளது. இதையும் பயன்படுத்திக் கொள்ள தவறினால், முந்தைய ஆண்டைப் போலவே இம்முறையும், 10 சதவிகித வட்டி விதிக்கப்படும் என, நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------------------------

<u>வானிலை</u> (13)

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, வரும் 20ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட மலை பகுதிகளிலும், நீலகிரி, ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், இன்றைய தினம், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வெப்பநிலையை

பொருத்தவரை, வரும் 18ஆம் தேதி வரை, பெரிய மாற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவுதான் என்றாலும், 16ஆம் தேதிக்கு மேல், ஓரிரு இடங்களில், 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை, வெப்பநிலை குறையலாம் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருச்சி மாவட்டம் மருங்காபுரி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி உள்ளிட்ட இடங்களில், தலா 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

__*கேலோ இண்டியா* (9)__

கேலோ இண்டியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் கடைசி நாளான இன்று, புதுடெல்லி இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் கலை விளையாட்டு போட்டிகளில், வீரர்-வீராங்கனைகள், சிறப்பான முறையில் திறன்களை வெளிப்படுத்தினர். ஆடவர் தரை நிலை இறுதிப் போட்டியில், உத்தரபிரதேஷ் வீரர் டி ஹர்ஸ்ச்சித் தங்கப் பதக்கம் வென்றார். கேரள வீரர் மின்ஹஜ் சாஜ், வெள்ளிப் பதக்கமும், துலின் திவாரி, வெண்கலப் பதக்கமும் வென்றனர். மகளிர் Vaulting Table இறுதிப் போட்டியில், தெலங்கான வீராங்கனை நிஷிகா அகர்வால், தங்கப் பதக்கம் வென்றார்.

------------------------------

__*ப வீக்கம்* (8)__

மொத்த விலைகளின் அடிப்படையிலான பண வீக்கம், இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில், 0.85 சதவிகிதமாக கணிசமான அளவில் குறைந்துள்ளது. இது அதற்கு முந்தைய மாதத்தில், 2.05 சதவிகிமாக இருந்தது. உணவுப் பொருட்கள் மற்றும், பிரதான பண்டங்களின் மொத்த விலைக் குறியீடுகள், ஏப்ரல் மாதத்தில் குறைந்ததும், எரிபொருள் பிரிவில், பண வீக்கப் போக்கு மாறியதுமே, மொத்த விலைப் பணவீக்கம் குறையக் காரணங்கள் என்று

மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

------------------------------

<u>தன்கர் (11)</u>

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், நாளை ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு, ஒருநாள் பயணம் மேற்கொள்கிறார். முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் பைரோன் சிங் ஷெகாவத் நினைவு நாளை ஒட்டி, ஜெய்ப்பூரில் அன்னாரின் பெயரில் கட்டப் பட்டுள்ள, நினைவு நூலகத்தை, திரு. தன்கர் திறந்து வைக்கிறார். ராஜஸ்தானைச் சேர்ந்த பைரோன் சிங் ஷெகாவத், அம்மாநிலத்தின் முதலமைச்சராக 3 முறையும், பின்னர் 2002 முதல், 2007ஆம் ஆண்டு வரை, குடியரசுத் துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர் ஆவார். பைரோன் சிங் ஷெகாவத் நினைவு நூலகத்தின் திறப்பு விழாவில், மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா உள்ளிட்டோர், பங்கேற்க உள்ளனர்.

------------------------------